உ

சிவமயம்.

முருகன் துணை.

ரெங்கோனைச்சேர்ந்த பவுண்டைமாநகர்

செல்வ விநாயகர் பேரில்

செந்தமிழ் பதிகம்.

இஃது,

இராமனாதபுரம் ஜில்லா கமுதி தாலூகா அபிராமம் மாநகரைச்
சார்ந்த வீரசோளம் மாநகர் வளரும் மாக்ஷிமை தங்கிய அறம்
பொருளின்ப மேன்மை சந்தான வள்ளல் மகா-ா-ா-ஸ்ரீ

பொ. சி. ஷேதுமேஸ்திரி அவர்களின்

அருந்தவப்புத்திர சிகாமணியாகிய மஹாவித்துவான் செயி
னில்லாபதித் தாசரவர்கள் மாணவரி லொருவராகிய
காரைக்குடி நாட்டுக்கோட்டை தனவைசியரில்
இளையாற்றக்குடி கோவில் களணிவாசக்குடியார்

அரு. சிவ. ரும. நாராயணஞ் செட்டியார்

[illegible] தவப்புத்திர சிகாமணியாகிய
[illegible] த்துக்கவி
[illegible] லனுலியற்றியதை
[illegible] ஸில், பதிப்பிக்கப்பட்டது.

[illegible] 924. [விலை அணா 2.



உ

சிவமயம்.

முருகன் துணை.

செங்கோனைச்சார்ந்த பவுண்டைமாநகர்

செல்வ விநாயகர் பேரில்

செந்தமிழ் பதிகம்.

இஃது

இராமநாதபுரம் ஜில்லா கமுதி தாலூகா அபிராமம் மாநகரைச்
சார்ந்த வீரசோளம் மாநகர் வளரும் மாக்ஷிமை தங்கிய அறம்
பொருளின்ப மேன்மை சந்தான வள்ளல் மகா-ா-ா-ஸ்ரீ

பொ. சி. வேலுமேஸ்திரி அவர்களின்

அருந்தவப்புத்திர சிகாமணியாகிய மஹாவித்துவான் செ[illegible]
ளில்லாபதிதாசரவர்கள் மாணவரிலொருவராகிய
காரைக்குடி நாட்டுக்கோட்டை தனவைசியரில்
இளையாற்றக்குடி கோவில் களணிவாசக்குடியார்

அரு. சிவ. ரும. நாராயணஞ் செட்டியார்


அவர்கள் அறிய தவப்புத[illegible]யாகிய

முத்துக்கவி

கோவிந்த தாஸனியற்றியதை

மதுரை ஸ்ரீ கோண்டா பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.


[காப்பிரைட்] 1924. [விலை அணா 2


தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 008

உ

சிவமயம்

சாற்றுக்கவி.



இஃது

திருவாரூர் மகா-ள-ள-ஸ்ரீ

அருள்கவி

கண்ணுதாஸரவர்களால் விளங்கிய

விருத்தம்

சொல்வளமிகுந்து வாழுந் துகளருங்கண்கள் வேண்டி
செல்வமும் புகழுங்கொண்ட தேசிகர் குலத்தில் வந்தோன்
கல்வியிற் தேர்ச்சியுள்ள கணபதி து[illegible]காவிந்தன்
நல்வளமாகச் சொற்றான் நாரணன் புதல்வன் மாதோ.



உ

சிவமயம்





பவுண்டை

செல்வ விநாயகர்

செந்தமிழ் பதிகம்



விநாயகர் துதி

சீரான செந்தமிழை செப்புதற்குப் பேர்மேவுங்
காரானை மாமுகத்தான் காப்பு

வெண்பா

சீர்பெருகுங்நகர்வாள் செல்வக்கணபதிமேல்
[illegible] குகக் கவிதை பண்கள் நேர்மையுடன்
[illegible] ருந் தங்கிவிளையாடற்
ஞான் வாணி [illegible]

விருத்தம்

பார் யெங்கு மோங்கு புகழ் தங்கும் பிரகாசப்
பவுண்டை நகர் நாலறையிலே

பரிவாயமர்ந்த பரிபூரணப் பொருளான
பாக்கிய சௌபாக்கியமான

சீர்மிகுந் தோங்குணாதிபதியான சிவ
செல்வக்கணாதிபதியே

தேடியுமை நான்றேச தேசமெங்குஞ் சுற்றி
திரிந்தலைந்தோடி யிங்கு

நேர்கண்டு கொண்ட பலனென்ன சொல்வேனுமது
நின் மலர்ப்பாத சேவை

நினைவொடு பணிந்து மென் நெஞ்சந்திருத்து மென்
நேத்திரஞ் சுத்தியாக்கி

பேர்மிகுந் தோங்குமா வர்த்தகம் நாளு நான்
பிரபல்யமாகச் செயும்

பேளைவயிற் வேளமுகக்காளையே வந்தெனைப்
பேணிப்ப துன்கடமையே (1)

முத்திக்கி வித்தாய் முளைத்தப்பரமானந்த
மூர்த்தி மும்மூர்த்தியான

முக்கண்ணாரிடது பாகத் தமர்ந்த சிறு
முத்தாணி முத்துச்சிவ

சத்தியுமையாள் செய்த நற்றவத்துற்ற சிவ
சாமி சிவசாமி கந்த

சாமிக்கிசைந்த கைத்துணையாக வந்த சிவ
சத்திக்கணாதிபதியே

நத்தியும் பாதாரவிந்த மலர்கண்டு யான்
நலமாய் பணிந் துகந்தே

நாளுமெனை யண்டியே ஞானமுங்கல்வியும்
நல்லொழுக்கமும் புத்தியும்

சித்தியும் முத்தியும் வித்தியும்பத்தியும்
செல்வ மென்மேலு மோங்க

செய்வதுன் கடனாகும் யெங்கள் குல தெய்வமே
செல்வக்கணாதி பதியே (2)

ஆதி முன்னங்கணாதிபதியாய் வந்த
அம்பலத் தருமருந்தே

அடியவர்க்கமுதமாய் வந்த பரமானந்த
அருள் நிறைந்தொரு விருந்தே

சோதிப்பிரகாசமெஞ் ஞானமணிவாசலில்
துலங்குஞ் சுகானந்தமே

சொற்பிரணவச் சொரூப சூட்ச நிலைதன்னிலே
தோன்றும் மகாவிந்தமே

பாதிமதியோன் மங்கையாள் செய்தவத்துற்ற
பாலனே சுகலோலனே

படிமீதிலுன்னடிமை மிடிநோய்களஞ்சாது
பாலனைக்காருமையா

நீதினை வந்து யிதுவேளை ரக்ஷிக்க
நினைவைப்பதுன் கடமையே

நித்தனே சுத்தனே பக்தர் பணிமுத்தனே
நிலைசெல்வக் கணபதியே (3)

கண்ணாயிரம் முதல் தேவர்முனியாவரும்
கைகூப்பியே வணங்க

கர்த்தனாய்வந்த பரிபூரணப் பொருளான
கைலைமலை நாதருக்கு

கன்னியாய்வந்த சிவசத்தியுமையாள் செய்த
கற்பினால் வந்துதித்த

கந்தவேளுக்கடவி தன்னிலே துணைவந்த
கரிமுகக் காளையுனை

மன்னனே யுன்னையான் நன்னயமதாகவே
மதலை நான் தேடிவந்தேன்


மனதுடனென்னை நாடியுனது கண்போலவே
வைப்பதுன் கடமையையா

தென்புடனென்கவலை தீர்த்திடுவதுன் பெருமை
செப்பிடலாகுமோதான்

ஜெகமெலாம் புகழ்பெற்று ஆகுவாகனமேறும்
செல்வக்கணாதிபதியே

கானகந்தனிலுள்ள மானுடும் பரிகரடி
கல்லானை யாளி சிம்மம்

கடுவாய் சிறுத்தை நரி கொடுமாவிலங்கினின்
கண்பிதிர்ந் துயிர் துறக்க



பானமது யெய்திடும் ஜெயவீர பராக்கிரம
பரிவேட குகதீரனை

பழகிச்சினேகித்து அன்பரைக் கைக்கொண்ட
பாலகிருஷ்ண கடவுளின்

ஆனநல் மருகனாய் வந்தவதரித்த
ஆறுமுகக்கடவுளர்க்கு

அண்ணனே விண்ணனே மன்னர் புகழ் கண்யனே
ஆனை முகப்பிள்ளையாரே

ஓநமோ வென்று நானும்மைப் பணிந்திட
ஒழி திறந்தருள் புரிகுவாய்

உத்தமி மனோன்மணி சத்தி சிவபாலனே
உறசெல்வகணாதிபதியே (5)

மலைவேடன் மகளான மாது சிவசக்தியே
மணிமந்தர ரூபிணியே

மங்கையாம் அங்கையாம் மாதவன் றங்கையாம்
மன்மதன் மாமியற்கு

தலையாறு முகத்துள யீராறு கரத்துள
ஷண்முகப் பேர் விளங்கும்

சத்திசிவ புத்திரன் நத்திவரு தெய்வமாய்
தரணி யோர் கழிகூறிடும்

கலைவல்ல மாமுனி யீன்ற குறவள்ளியை
கடிமணம் செய்வதற்கு

கைக்குதவியாய் வந்து திக்கெலாம் புகழ்தந்த
கரிமுகக் காளையுன்னை

நிலையாகயுன்பதந் தஞ்சமென் றெண்ணினேன்
நிலைமையைத் திறந்து வைப்பாய்

நித்தியகல்யாணி தவ புத்திக்கிசைந்திட்ட
நில செலவக்கணுதிபதியே (6)

தஞ்சமென்றோர்களை தயவுகள் செய்து நீ
தற்காக்க வேணுமையா

சந்ததமுந்தனைச் சிந்தை தனிலெண்ணினேன்
சஞ்சலந் தீர்த்தருளுவாய்

வஞ்சனைகள் பில்லி சூனியம் மாரணம்
மண்டைவலி கண்ணோய்களும்

மந்தார காசமும் வயிற்றுவலி சூலைநோய்
மசா நோவு தீர்த்தருளுவாய்

கஞ்சசிசு பாலனை வஞ்சகமதாய்க்கொன்ற
கார்வண்ணன் மருகனையா

காலனைக் காலாலுதைத்தவன் பாலனே
கடியவினை தீர்த்தாளுவாய்

அஞ்சலியஸ்தனைப் நின்றுகைகூப்பினேன்
அடியேனைக் காருமையா

அழகானநகர் தனில் அன்பாயமர்ந்திட்ட
அப்செல்வக்கணாதிபதியே (7)

திருமயிலைத் தென்பழனி செந்தூர் திருப்பரங்
குன்றமா திருவேங்கடம்

தென்காஞ்சி சீர்காழி சிக்கல் சிதம்பரம்
திருவருணை யெட்டு குடியும்

கருவூர் திருப்புவன வாதவூர் கழுகுமலை
கதிர்சாமமுங் கடம்பம்

கம்பை திருச்செங்காடு நல்லூர் திருத்தணிகை
காளஸ்திசிரீங்க முதலாய்

அருளாக வந்த பரமானந்த மெய்ப்பொருள்
ஆருமுகத் தம்பிரானின்

அண்ணனே மன்னனே உன்னடியை யெண்ணி நான்
ஆலயந்தேடி வந்தேன்

இருகை யெடுக்கு மிவ்வேளை நிமை சுத்தியாய்
இன்று செய்வதுன் கடமையே

யேகனே ஆகுவாகன மேரு யோகனே
ஜெயம் செல்வக்கணாதிபதியே (8)

தேவர்க்கதிபதி தேவேந்திரன் பெற்ற
சிங்காரரூப கண்ணி

தெய்வானை யென்பவள் கருத்திற் கிசைந்துள்
சிங்காரமான வேலன்

ஆவல்க்கிசைந்தபடி அண்ணனாய் வந்து நீர்
ஆகு[illegible]கணத்திலேறி

அன்பனாய்வந்தவா தொந்தி வயிருள்ளவா
அழகான ஆனைமுகவா

கேவலம் நான் சிறுவனும்மைப்பணிந்திட
கிருபையுடனெனக்கிரங்கி

கெம்பீர பார்வையும் நம்பனுட சேவையுங்
கீர்த்தி தந்தெனை யாளுவாய்

நாவலன் பாடிய நற்பவுண்டை நாலறை
நன்மை தருமேல் வீட்டினில்

நகரத்தார் போற்றிட நல்முத்திதந்திடும்
நற்ச்செல்வக்கணாதிபதியே (9)

ண்டபுவனங்களுக்குட்பட்ட மானிடர்க
ளறிவு தற்காக வந்த

ன்பனாம் பரமசிவனானந்த மூர்த்தியின்
அருளுக்கிசைந்த கன்னி

வண்டாமரைப் போன்ற அகிலாண்டவல்லிக்கி
வேடிக்கையான மைந்தா

ளையாட்டுப் பிள்ளை போலலையாமலென்னை நீ
வித்தைக்கு அருள்புரிகுவாய்

கண்டதுங் கும்பிட்டு மண்டலந்தனிமீது
கவிவரிசை பாடிவந்தேன்

காரையம்பதி மீது களனிவாசல்க்குடி
கரை யெனும் பிரிவு தன்னில்

ண்டர் புகழ் நாரணன் அருந்தவப்புத்திரன்
அரந்தையைத் தீர்க்கவென்று

ன்பனாங் கோவிந்தன் செந்தமிழ் பாடினேன்
அம் செல்வக்கணாதிபதியே (10)

சண்முகனே யுன்றுமம் போற்றி போற்றி
சடாச்க்ஷரத்தை துதிக்க அருள் செய்வாய் போற்றி
கண்ணன் மருகா முருகா போற்றி போற்றி
கதிர்வடிவேல் நாயகனே போற்றி போற்றி
முன்னமரர் துயர் தீர்த்தாய் போற்றி போற்றி
முருக வேலாயுதனே போற்றி போற்றி
யென்னிமைதான் துகழறப் போற்றி போற்றி
னென்றயவு செய்யய்யா போற்றி போற்றி

பார்யெலா மோங்குகின்ற பரமம் வாழி
பண்பான பரமசிவனுமையும் வாழி
சீர்மிகுந்த கணபதியாம் செல்வன வாழி
சிறப்பான தங்கவடி வேலன் வாழி
பேர்மிகுந்த நாவல கோவிந்தன் வாழி
பெருமைமிகும் [illegible]த்தார் யாவும் வாழி
நேர்மையுடன் படி[illegible]க படிப்போர் வாழி
நினைவுடனே கேட்போரும் வாழி வாழி

செந்தமிழ் பதிகம் முற்றுப் பெற்றது.